# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. STC.No.349 of 2017**

**Defence side Witness: DW-2**

**Name** : திரு. ராஜேந்திரன்

Dated. 12.06.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது இலந்தைகூடத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். நானும் புகார்தாரரும் கோத்தாரி சர்க்கரை ஆலையில் ஒன்றாக வேலை பார்த்தோம். அதன்மூலம் புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரர் என்னிடம் அவரது உறவினர்க்கு தமிழ்நாடு பேப்பர் கழகத்தில் வேலை வாங்கவேண்டும் என என்னிடம் சொன்னார். நான் புகார்தாரரிடம் சென்னையில் உள்ள வரதராஜனிடம் பேசுமாறு சொன்னேன். புகார்தாரர் தொலைபேசி மூலமாக சென்னையில் உள்ள வரதராஜனிடம் பேசினார். அதற்கு வரதராஜன் வேலை வாங்கி தருவதற்கு பணம் கொடுக்கவேண்டும் என புகார்தாரரிடம் சொன்னார். அதற்கு புகார்தாரர் தற்போது என்னிடம் ரூ.3, 40,000/—பணம் உள்ளது அதை கொடுக்கிறேன் என வரதராஜனிடம் சொன்னார். என்னுடைய SBI ADB வங்கி கணக்கு மூலமாக புகார்தாரர் ரூ.3,40,000/—த்தை வரதராஜன் வங்கி கணக்கிற்கு அனுப்பினார். அதன்பிறகு புகார்தாரரும் நானும் சென்னையில் உள்ள வரதராஜனிடம் பேசினோம். அதற்கு வரதராஜன் இன்னும் 6, 7 இலட்சம் பணம் வேண்டும் மற்றும் யாருக்கு வேலை வாங்கி தரவேண்டும் என்ற விவரங்களும் கொடுக்கவேண்டும் எனவும் என்னிடமும் புகார்தாரரிடமும்

சொன்னார். 2017 ம் வருடம் புகார்தாரர் ரூ.3 இலட்சம் பணமும், நான் ரூ.4 இலட்சம் பணமும் ஏற்பாடு செய்துவிட்டு சென்னைக்கு சென்று வரதராஜன் என்பவரை அவரது வீட்டில்வைத்து சந்தித்தோம். வரதராஜனிடம் மொத்தமாக ரூ.7 இலட்சம் பணத்தை நானும் புகார்தாரரும் கொடுத்தோம். வரதராஜன் எங்களிடம் மூன்று மாதத்தில் வேலை வாங்கிதருவதாக சொன்னார். புகார்தாரர் வரதராஜனிடம் இரண்டு மாதத்திற்குள் வேலை வாங்கி தரவில்லை என்றால் நான்தான் பொறுப்பு என சொன்னார். வரதராஜன் எங்களிடம் உறுதியாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். மூன்று மாதங்களுக்கு பிறகும் வரதராஜன் சொன்னதுபோல் வேலை வாங்கி கொடுக்கவில்லை. அதனால் புகார்தாரர் என்வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார். நான் புகார்தாரரிடம் வரதராஜனிடம் பேசி வேலை வாங்கி தருவதாக சொன்னேன். மீண்டும் ஒரு மாதம் ஆகீயும் வரதராஜன் வேலை வாங்கி தரவில்லை. நான் என்னுடைய சொந்த வேலையாக SBI (ADB) வங்கிக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் 2018 ம் ஆண்டு வந்தேன். என்னுடைய இருசக்கர வாகனத்தை வங்கிக்கு அருகில் நிறுத்திவிட்டு எதிர்புறம் உள்ள டீகடையில் நானும் திருநாவுக்கரசும் டீகுடித்துக்கொண்டு இருந்தோம். டீகுடித்துவிட்டு வந்து பார்த்தபோது எனது வண்டியில் வைத்திருந்த SBI (ADB) வங்கி கணக்கு புத்தகம், விவசாய கடனிற்காக ஆவணங்கள் , SBI (ADB) காசோலை புத்தகம், கோத்தாரி யில் கொடுத்த கடனிற்காக ஆவணங்கள், கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் ஆகியவை வைத்திருந்த மஞ்சள் பை மொத்தமாக காணமல்போய்விட்டது. நான் இதுகுறித்து வங்கி மேலாளரிடம் சொன்னேன். வங்கி மேலாளரிடம் காணாமல்போன ஆவணங்கள் குறித்து எழுதிக்கொடுத்தேன். நான்

இலால்குடி காவல் நிலையம் சென்று ஆவணங்கள் காணாமல்போனது குறித்து புகார் கொடுத்தேன். அதன்பிறகு 10, 15 நாட்களுக்கு பிறகு புகார்தாரர் எனது வீட்டிற்கு வந்து என்னுடைய பணத்தை என்னிடம் கொடுங்கள் என்று சொன்னார். நான் வரதராஜனிடம் பேசினேன்வரதராஜன் ஒரு மாதத்திற்குள் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அதன்பின்பு எனக்கு புகார்தாரர் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். நான் இது குறித்து புகார்தாரரிடம் கேட்டேன். புகார்தாரர் என்னிடம் உன்னை மிரட்டுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னார். நான் வரதராஜன் மீது அரியலூர் மாவட்டம் வெங்கனுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் திருச்சி உதவி காவல்துறை இயக்குநரிடம் இது தொடர்பாக புகார் கொடுத்தேன். அதன்பிறகு வரதராஜனை போலீசார் கைது செய்தார்கள். வரதராஜன் காவல் நிலையத்தில் ஒரு மாதத்திற்குள் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக எழுதிக்கொடுத்தார். வரதராஜனை வேறு, வேறு வழக்குகளில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்கள். தற்போது வரதராஜன் திருச்சி மத்திய சிறையில் உள்ளார். நான் புகார்தாரரிடம் எப்போதும் எந்த தொகையையும் கடனாக பெற்றதில்லை. நான் எப்போதும் புகார்தாரருக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை.

புகார்தாரர் தரப்பு வேண்டுக்கோளுக்கினங்க குறுக்கு விசாரணைக்காக 18.06.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.12 10:29:38 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி